**நாவகதேகம பிரதேச சபை - 2023**
------------------------------------------------------------ -

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நாவகதேகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளளவாறான நாவகதேகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்பபை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப்

பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சொத்துக்களின் மீள்மதிப்பீட்டு கணக்கீட்டு கொள்கைளில் ஒரே வகுதியுள்ள சகல சொத்தக்களும் மீள்மதிப்பீடு செய்தபின்னரான பெறுமதி கணக்கீடு செய்ய வேண்டிய போதிலும் புதிய கடைத் தொகுதி கட்டிடம் மாத்திரம் ரூபா 8,450,000 இல் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அத்தகையவாறு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | காலக்கிரமத்தில் கணக்கிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்து மீள்மதிப்பீட்டை திருத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஆதனம், பொறி மற்றும் உபகரண கணக்கு மீதி மற்றும் மூலதன உள்ளீட்டிற்கான வருமான பங்களிப்பு கணக்கு மீதி என்பன ஒரேயளவாக இருக்க வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,525,121 ஆன விதியாசம் இருந்தது. | காலக்கிரமத்தில் கணக்கிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நாளேட்டு பதிவுகள் ஊடாக திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாக சோசலீச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | நி.பி.103(1) (அ), (ஆ), (உ), (ஊ) மற்றும் 104(4) | சபைக்கு சொந்தமான கப் வாகனம் 2021 ஆகஸ்ட் 20 இல் விபத்திற்குட்பட்டிருந்தது. இது தொடர்பில் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வெண்டும். |
| (ஆ) | சமுதாய அடிப்படை அமைப்புகளை தாபித்து நெறிப் படுத்துவதற்கான (நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் சுகாதாரம்) 2013 இன் 01 ஆம் இலக்க பட்டயம். | வடமேல் நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் சுகாதார பிரிவில் தாபிக்கப்பட்ட 14 சமுதாய அடிப்படை அமைப்புகள் பதிவு செய்வதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | சமுதாய அடிப்படை அமைப்புகள் பதிவு செய்வதற்கு கண்காணிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | கலந்துரையாடலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வெண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 2,911,507 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 1,267,997 ஆகும்.

### 2.2. வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம்** | **பட்டியலி டப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப் பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** | **மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம்** | **பட்டியலி டப்பட்ட வருமா னம்** | **சேகரிக்கப் பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** |
| | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 |
| வீதவரியும் வரியும் | 1,309 | 1,347 | 1,129 | 144 | 1,284 | 1,255 | 1,129 | 164 |
| வாடகை | 8,361 | 3,151 | 2,984 | 209 | 6,192 | 2,845 | 2,813 | 73 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 193 | 233 | 233 | - | 194 | 159 | 159 | - |
| ஏனைய வருமானம் | 2,640 | 1,919 | 1,700 | 229 | 876 | 686 | 666 | 31 |
| மொத்தம் | 12,503 | 6,650 | 6,046 | 582 | 8,546 | 4,945 | 4,767 | 268 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,333,666 தொகையான நீதி மன்ற தண்டப்பணங்கள் மற்றும் ரூபா 567,020 தொகையான முத்திரை வரி என்பன பிரதம செயலாளர் மற்றும் மாகாண சபை ஏனைய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவயாக இருக்கின்ற தொகைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவயாக இருக்கின்ற தொகைகளை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்குகள் ரூபா 9,689,631 ஆக இருந்ததுடன் அந்த தொகை 03 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 1,047,632 தொகை இருந்தது. | நிலுவயாக இருக்கின்ற தொகைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவயாக இருக்கின்ற வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்குகள் ரூபா 9,745,842 ஆக இருந்ததுடன் அந்த தொகை 03 ஆண்டுகளை விஞ்சிய ரூபா ,921,505 தொகை இருந்தது. | நிலுவயாக இருக்கின்ற தொகைகள் தீர்ப்பனவு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்கொடுத்தோர் மீதிகளை உடனடியாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | சபைக்கு சொந்தமான கட்டிடங்கள் அமைந்துள்ள காணிகளின் சட்ட உரிமையை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்காததுடன் சபையால் 14 சுடுகாடுகள் செயற்படுத்தி கட்டுப்படுத்தி பராமரிக்கப்படுகின்றன. | அத்தகைய காணிகளை கையேற்பதற்கு உடனடியாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய ஆதனங்களின் சட்ட உரிமையை கையேற்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1992 இல் பிரதம செயலாளர் அலுவலகத்தால் வழங்கப்பட்ட மற்றும் சபையால் பயன்படுத்தப்பட்ட கப் வாகனம் மற்றும் 2022 இல் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சால் வழங்கப்பட்ட ரூபா 14,000,000 பெறுமதியான தண்ணீர் பவுசர் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் தண்ணீர் பவுசர் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய வாகனங்களின் சட்ட உரிமையை கையேற்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 95,000 பெறுமதியான 02 சொத்துக்கள் நீண்டகாலமான பயன்படுத்தப்படாது பயனற்று இருந்தது. | காலக்கிரமத்தில் இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்தக்கள் வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | நாகவத்தேகம பஸ்தரிப்பு நிலைய கட்டிடம் 2017 இல் புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 12,977,976 செலவழித்து உருவாக்கப்பட்டிருந்ததுடன் மேல் மாடி 06 ஆண்டுகளிற்கு மேல் பயன்படுத்தப்படாது பயனற்று இருந்தது. | கேள்விகள் திரும்பவும் அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்க நிதிகளை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட பௌதீக வளங்களிலிருந்து அதிகூடிய நலன்கள் பெறப்பட வேண்டும். |
| (உ) | பிரதேச சபை வலுப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடமாடும் மீன் கடை 2020 இல் ரூபா 175,000 கிரயத்தில் கட்டப்பட்டிருந்ததுடன் 2022 இலிரந்து குத்தகைக்கு விடப்பட்டிருக்காததுடன் பயனற்று இருந்தது. | 2024 இல் குத்தகைக்கு விடப்படும். | அரசாங்க நிதிகளை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட பௌதீக வளங்களிலிருந்து அதிகூடிய நலன்கள் பெறப்பட வேண்டும். |
| (ஊ) | 2019 இல் மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியங்களின் கீழ் கெதரவேவ ஸ்வசக்தி விளையாட்டு கழகத்திற்கு சொந்தமான விளையாட்டு மைதானத்தின் விருத்திக்காக ரூபா 942,053 ஆன தொகை ஏற்பட்டிருந்ததுடன் பைௌதீக பரிசோதனையில் விளையாட்டு மைதானம் புதர்களால் மூடப்பட்டிரந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. | விளையாட்டு போட்டிகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அரசாங்க நிதிகளை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட பௌதீக வளங்களிலிருந்து அதிகூடிய நலன்கள் பெறப்பட வேண்டும். |
| (எ) | கெதரவேவா கைப்பந்தாட்ட மைதானதானத்தின் நிர்மாணத்திற்கான இறுதி கொடுப்பனவு அறிக்கை பிரகாரம் 05 ஆவது வேலை விடயத்தின் கீழ் கைப்பந்தாட்ட மைதானம் கட்டுவதற்கு ரூபா 31,336 ஆன தொக செலுத்தப்பட்டிருந்த போதலும் அத்தகைய | விளையாட்டு சங்கங்களால் ஏற்பட்ட மோசடி திருத்தப்பட்டிருந்தது. | அரசாங்க நிதிகளை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட பௌதீக வளங்களிலிருந்து அதிகூடிய நலன்கள் பெறப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கைப்பந்தாட்ட மைதானம் பௌதீக பரிசோதனையில் தென்படவில்லை. | | |
| (ஏ) 2021 இல் கிராமிய விளையாட்டு மைதான அபிவிருத்தியின் கீழ் ரூபா 1,470,000 ஆன கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட கெலவேவ விளையாட்டு மைதானம் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் புதர்களால் மூடப்பட்டிருந்தது. | தற்போது வரை உரிய விளையாட்டு மைதானங்கள் சுத்தமாக்கப்பட்டிருந்ததுடன் முந்திய விளையாட்டு பொட்டி வரிசைகளுடன் பயன்படுத்தப்பட்டது. | அரசாங்க நிதிகளை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட பௌதீக வளங்களிலிருந்து அதிகூடிய நலன்கள் பெறப்பட வேண்டும்.. |
| (ஐ) கழிவகற்றல் யாடடின் நிர்மாணத்திற்காக ரூபா 17,535,238 ஆன தொகை ஏற்பட்டிருந்த போதிலும் இது காட்டு யானைகளின் ஆபத்து காரணமாக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் பயனற்றிருந்தது. | ஐகொம்போஸ்ட் உற்பத்தியை தொடங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | அரசாங்க நிதிகளை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட பௌதீக வளங்களிலிருந்து அதிகூடிய நலன்கள் பெறப்பட வேண்டும். |
| (ஒ) கழிவகற்றல் யாட்டிற்காக பெறப்பட்ட தண்ணீர் பவுசர் பலநோக்கு கட்டிட வளவில் பயன்படுத்தப்படாது விடப்பட்டிருந்ததுடன் கியூலர் இயந்திரம் சபை வளவில் பயன்படுத்தப்படாது விடப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |
| (ஓ) 2022 இல் கிராமிய நிகழ்ச்சித் திட்டத்துடன் உடையாடலின் கீழ் தம்மனான்னவெட்டிய கோயில் முன்பக்கத்தில் ரூபா 1,006,831 ஆன கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட நடைபயிற்சி பாதை குடியிருப்பாளர்களால் பயன்படுத்தப் பட்டிருக்காததுடன் புதர்களால் மூடப்பட்டிருந்தது. | குடியிருப்பாளர்களால் நடைபாதைக்கு பயன்படுத்த உடனடியாக நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்படும். | அரசாங்க நிதிகளை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட பௌதீக வளங்களிலிருந்து அதிகூடிய நலன்கள் பெறப்பட வேண்டும்.. |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் உள்ளபடியான மற்றும் அனுமதிக்கப்பட்ட பதவியணியின் பரிசோதனையில் மூன்றாம் நிலை பதவியாக இரந்த செயலாளர் பதவி நிரப்பவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டு இறுதியில் இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலைகளில் முறையே 09 வெற்றிடங்களும் 17 மிகைகளும் இருந்தன. | உள்ளூராட்சி திணைக்களம் மிகைகள் மற்றும் வெற்றிடங்களில் கவனம் செலுத்தியிருந்தது. | சபைக்கு தேவையான பதவியணியை சரியாக இனங்காண்பதற்கும் அனுமதி பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பல்வேறு 09 நடவடிக்கைகளின் பூரத்தியாக்கலிற்காக ரூபா 180,643 ஆன தொகை ஏற்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட மட்டம் அடையப்பட்டிருக்கவில்லை. | 2024 செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் அந்த நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயல்நடவடிக்கை திட்டத்தின் நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவு சனவரி முதல் யூன் வரை உள்ளக கணக்காய்வை மேற்கொள்ளப் பட்டிருக்காததுடன் சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவு வருகை பதிவே, விடுமுறை, வருமான சேகரிப்பு, மாதாந்த ஓட்ட அட்டவணை மற்றும் யூலை முதல் செப்தெம்பர் வரையாக கணக்குகள் என்பவற்றில் மாத்திரமே கவனம் செலுத்தியிருந்தது | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் நி.பி 133(1) என்பவற்றிற்கமைய நடவடிக்கை எடுக்கப்படும் | சபையின் சகல நடவடிக்கையையும் மேவி போதிய உள்ளக கணக்காய்வை மேற்கொள்ளப்பட வெண்டும். |

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) தயாரிக்கப்பட்ட பாதீட்டிற்கு அமைய 23 செலவின விடயங்களிற்காக ரூபா 1,641,680 ஆன ஏற்பாடுகள் முழுமையாக சேமிப்பாக இருந்தது. | எதிர்காலத்தில் சரியான வழியில் நெகிழ்ச்சியற் மற்றும் சரியான பாதீடுகளை தயாரிப்பதற்காக எரிய நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கபபடும். | பாதீட்டு இலக்குகளை நிறைவேற்றக் கூடிய வகையில் செயற்பாட்டு நடவடிக்கைகள் திட்டமிடப்பட வேண்டும்.. |
| (ஆ) சரியான வழியில் நெகிழ்ச்சியற்ற மற்றும் சரியான பாதீடுகளை தயாரிக்காமையால் மீளாய்வாண்டில் 20 செலவின விடயங்களிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 4,072,250 ஆன ஏற்பாடுகளிலிருந்து 50 சதவீதத்திலிருந்து 99 சதவீதம் வரையான வீச்சில் சேமிப்புகள் இருந்தது. | -மேற்படி- | பாதீட்டு இலக்குகளை நிறைவேற்றக் கூடிய வகையில் செயற்பாட்டு நடவடிக்கைகள் திட்டமிடப்பட வேண்டும்.. |

### 4.4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சபையானது ஆரோக்கியம் மற்றும் கூட்டிணைவு கட்டிட கட்டமைபபு, நிலைபேறான சக்தி பயன்பாடு, கல்வி தரம் மற்றும் வறுமை தவிர்ப்பு பாதுகாப்பு | 2024 செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை | முறையாக இனங் காணப்பட்ட நோக்குகள் மற்றும் இலக்குகளை நிறை |

போன்ற 2023 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் நிலைவேற்றலிற்காக 09 இனங்காணப்பட்ட நடவடிக்கைகள் முன்னேற்றத்தை அடையாமையால் 2.6 சதவீதத்திற்கும் 84 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் இருந்தது.

நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.